சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No. 153 / 2016

பெயர்: சாந்தி (வா.சா.1) 09.06.2023

2 முதல் 4 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது அப்பாவின் முதல் குழந்தை 2 ம் பிரதிவாதி முத்து ஆவார். எனது அண்ணன் முத்து 1956 ல் பிறந்தார். நான் திருச்சியில் பிறந்தேன். எனக்கு உடன் பிறந்தவர்கள் எங்கு வைத்து பிறந்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனக்கு 2 அத்தைகள் அதில் ஒருவர் பெயர் கன்னியம்மாள். அவரது கணவர் பெயர் நல்லேந்திரன். நல்லேந்திரனின் அப்பா பெயர் ஆண்டிச்செட்டியார். தனம் என்பவர் எனது உட்,ன பிறந்த சகோதரி. தனம் என்பவரின் கணவர் பெயர் பழனியாண்டி. அவர்களது மகன்கள் சங்கர் மற்றும் பிச்சை. என்னிடம் காட்டப்படும் பி,வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள சாட்சி கையெழுத்து எனது அப்பா மாரியப்பனுடையதா என்று எனக்கு தெரியவில்லை. மருதமுத்து பிள்ளை மகன் நடராஜன் என்பவரை எனக்கு தெரியாது. மாணிக்கவாசம் மகன் குருமூர்த்தி என்பவரையும் எனக்கு தெரியாது. எனது அத்தையின் கணவர் நல்லேந்திரன் இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் 07.05.2008 தேதியிட்ட மாரியப்பன் செட்டியார் எழுதி வைத்த உயில் ஆவணத்தில் புகைப்பட நகலில் உள்ள சாட்சி கையெழுத்து நல்லேந்திரன் உடையதா என்று எனக்கு தெரியாது. நல்லேந்திரன், பழனியாண்டிச் செட்டியார் மகன் சங்கர் ஆகியோரிடம் எனக்கு விரோதம் கிடையாது. புகழ்யாபிள்ளை தெருவில் உள்ள சரவணன் என்பவரை எனக்கு தெரியாது. நான் தாவா சொத்துக்களை அனுபவம் செய்ததாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு பூர்வீக சொத்து இருந்ததாகவும் அதில் வருமானம் வந்ததாகவும் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை ஆவணத்தை தாக்கல் செய்தால் எனது வழக்கிற்கு விரோதம் ஆகிவிடும் என்பதால் அதனை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பெயரில் கிரயம் வாங்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் அவரது சொந்த வருமானத்தில் தனித்து கிரையம் வாங்கப்பட்டு தனித்து பாத்தியப்பட்டு அவரால் தனித்து அனுபவிக்கப்பட்டு வந்தது என்றால் சரியல்ல. எனது அம்மாவால் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் அவரது தனிப்பட்ட வருமானத்தில் இருந்து சுயார்ஜிதமாக கிரையம் பெறப்பட்டு அவருக்கு தனித்து பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. எனது அப்பா உயில் எழுதி வைத்த விவரமும எனது அம்மா உயில் மற்றும் செட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரமும் எனக்கு தெரியாது. எனது அம்மா எனது

கணவரின் மீது போலீசில் புகார் கொடுத்திருந்தார். எனது அம்மா போலீசில் புகார் கொடுத்து சுமார் 8 வருடம் இருக்கும். இந்த வழகககு தாக்கல் செய்த பின்பு தான் எனது அம்மா போலீசில் புகார் கொடுத்தார். எனது கணவரின் மீது கிரிமினல் வழக்கு இல்லை. அசல் வழக்கு 84/2013 என்ற வழக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கை வாபஸ் பெற மனு தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். பிரதிவாதிகள் சொத்தை பிரித்து கொடுத்து விடுவதாக சொல்கிறார்கள் என அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் மேற்படி வழக்கை வாபஸ் பெறுவதற்காக தாக்கல் செய்த மனுவை இந்த வழக்கில் தாக்கல் செய்தால் எனது வழக்கிற்கு விரோதம் ஆகிவிடும் என்பதால் அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு பாகப்பிரிவினை கேட்க எந்தவித அறுகதையும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலை நிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதி எனது அண்ணன். அவருக்கும் எனக்கும் எந்தவித விரோதமும் இல்லை தற்போதும் எனக்கு அவருடன் சுமூகமான உறவு உள்ளது.

5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் வீட்டுக்குடித்தனமாக இருந்து வருகிறேன். எனது அப்பா அம்மாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பாகம் கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பாவை பெற்ற தாத்தாவிற்கு சுமார் 12 ஏக்கர் விவசாய நிலம் இருந்தது அதில் இருந்து எனது அப்பாவிற்கு பாகத்தில் பிரித்து கொடுக்கப்பட்ட 2 ஏக்கர்நிலத்தில் இருந்து வந்த வருமானத்தின் மூலம் தாவா சொத்துக்கள் எனது அம்மா பெயரிலும் அப்பா பெயரிலும் கிரையம் செய்யப்பட்டது, எனது தாயார் வீட்டுக்குடித்தனம் தான் செய்து வந்தார் அவருக்கு எந்த வித வேலையும் வருமானமும் இல்லை. எனது அம்மாவின் அம்மா வீடு ஏழ்மையான குடும்பம் தான். நான் இந்த நீதிமன்றத்தில் ஏற்கனவே பாகம் கேட்டு அசல் வழக்கு எண்.84/2013 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கு நிலுவையில் இருந்த போது இந்த வழக்கின் பிரதிவாதிகள் மற்றும் எனது அம்மா சேர்ந்து எனக்குசேர வேண்டிய சொத்துககளை பிரித்து கொடுப்பதாக சொன்னதின் பேரில் மட்டும் அந்த வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். எனது அம்மா அப்பா இருவரிடமும் கடை சி காலம் வரை சுமூகமான உறவு இருந்து வந்தது. இந்த வழக்கு தாக்ல செய்த பின்பும் எனக்கு எனது அம்மாவுடன் சுமூகமான உறவு இருந்து வந்தது. எனது தாயார் இறப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பு அவரை நான் சந்தித்த போது தாவா சொத்துக்களை சரிசமமாமக பிரித்துக் கொள்ளும்படி என்னிடம் கூறினார். எனது அம்மா தாவா சொத்துக்களைப் பொறுத்து இந்த வழக்கின் தரப்பினர்கள் யாருக்கும் எந்தவித ஆவணமும எழுதிக் கொடுக்கவில்லை. எனது அப்பா பெயரிலுள்ள சொத்துக்களைப் பொறுத்து எனது அப்பா யாருக்கும் எந்தவித ஆவணமும எழுதிக் கொடுக்கவில்லை சேர்ந்து பிரித்துக்

கொள்ளுங்கள் என்று மட்டும் எனது அப்பா கூறினார். என்னிடம் காட்டப்படும் 05.02.2019 தேதியிட்ட உயிலில் உள்ள கையெழுத்து எனது அம்மாவிடையது அல்ல. எனது அம்மாவின் கையெழுத்து எனக்கு நன்றாக தெரியும். நான் இந்த வழக்குதாக்கல் செய்த போது எனது அம்மா எழுதி வைத்ததாக கூறப்படும் உயில் பற்றி எனக்கு தெரியாது உயில் எழுதி வைத்ததாக எனது அம்மா என்னிடம் கூறவில்லை. எனது அப்பா மாரியப்பன் செட்டியார் திடிரென இறந்துவிட்டார். எனது அப்பா விவசாயம் தான் செய்து வந்தார். எனது இறந்த போது நகைகள் வைத்து சென்றார் அது எனக்கு தெரியும். எனது அப்பா இறந்த போது அவர் 200 பவுன் தங்க நகை வைத்திருந்தார் என்ற விவரம் எனக்கு நன்கு தெரியும். அந்த நகைகளை 4ம் பரிதிவாதி கோபால் மற்றும் 6ம் பிரதிவாதி வடிவேல் எடுத்துக்கொண்டதாக அவர்கள் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும். எனது அம்மாவின் இறப்பிற்கு பின்பு கூட்டுக் குடும்பமாக வசித்து வந்த் எங்களை விரட்டி விட்டு கோபால் மட்டும சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்து விட்டார் என்றால் சரிதான். தெலுங்கப்பட்டியில் இருந்த சொத்தை விற்க வேண்டிய கட்டாயம் எனது அப்பாவிற்கு இல்லை. தெலுங்கப்பட்டியில் உள்ள சொத்தை எனது அப்பா முருகன், பழனிசாமி ஆகியோருக்கு விற்கவில்லை 4,6 பிரதிவாதிகள் தான் சட்டத்திற்கு புறம்பாக மேற்படி சொத்துக்களை கிரையம் செய்து ஆதாயம் அடைந்துள்ளார்கள் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி எனது மூத்த சகோதரர் அவர் தற்போது புற்று நோய் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார். 4ம் பிரதிவாதி கோபால் 5ம் பிரதிவாதியை இந்த வழக்கில் இருந்து விலகுவதற்காக மருதை மீது பொய் புகார் கொடுத்து இடைஞ்சல் செய்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. திருச்சிராப்பள்ளி நகரப்பகுதியில் உள்ள சொத்துக்களை 4,6 பிரதிவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்து ஆதாயம் அடைந்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா பி செட்டியூல் 1ம் அயிட்ட சொத்தில் உள்ள கடைகளை மருதை அனுபவித்து வந்ததை 4ம் பிரதிவாதி இடஞ்சல் செய்து அதில் உள்ள கடைகளும் தற்போது பூட்டப்பட்டு உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சொல்லியுள்ளது போல் 5ம் பிரதிவாதி மருதை தாவா சொத்துக்களைப் பொறுத்து எந்தவித வில்லங்கத்திலும் ஈடுபடவில்லை என்றும் 4, 6 பிரதிவாதிகள் தான் தாவா சொத்துக்ளைப் பொறுத்து சட்டத்திற்கு புறம்பாக ஆவணங்களை உற்பத்தி செய்து மற்ற பங்குதாரர்களுக்கு பங்கு கொடுக்க கூடாது என்று சட்ட விரோதமாக செயல்பட்டு வருகிறார் என்றால்ச ரிதான். 7ம் பிரதிவாதிக்கு எந்த வித சொத்துக்களையும் எனது தாயாரோ எனது தந்தையோ பிரித்து கொடுக்கவில்லை. 7ம் பிரதிவாதி தனம் தாவா சொத்துக்களில் ஒரு சொத்தை தனது அனுபவித்தில் வைத்து அனுபவம் செய்து ஆதாயம் செய்து வருகிறார் என்றால்சரிதான். இவ்வளவு சொத்துக்கள் எங்கள் குடும்பத்திற்கு இருந்தும் நானும் மருதையும் அந்த சொத்துக்களில் அனுபவித்தில் இல்லாமல் இருந்து வருகிறோம் என்றால் சரிதான். 3

பிரதிவாதிகள் தாவா சொத்துக்களில் ஒரு சொத்தில் இருந்து வருகிறார். 2 ம் பிரதிவாதி எங்கு இருக்கிறார் என்று எனக்கு தெரியவில்லை. 2,3,4,6,7 பிரதிவாதிகள் கூட்டாக சேர்ந்து எனக்கும் 5 ம் பிரதிவாதிக்கும் எதிராக தாவா சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்து அதன் மூலம் ஆதாயம் அடைந்து வருகிறார் என்றால் சரிதான். நான் எனது வழக்குரையில் 5 ம் பிரதிவாதிக்கு எதிராக சொல்லியுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றும் வழக்கிற்காக சொல்லப்பட்டவை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் வாரிசு என்ற அடிப்படையில் 5 ம் பிரதிவாதி எந்த வித ஆதாயமும் இதுநாள் வரை அடையவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் 7 ல் ஒரு பாகம் 5 ம் பிரதிவாதிக்கு கிடைக்கக்கூடியது தான் என்றால் சரிதான். நான் அசையா சொத்துக்களைப் பொறுத்து மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அசையும் சொத்துக்களையும் இந்த வழக்கில் சேர்க்க வேண்டும் என்பதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை.

ஒம் / சாந்தி

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.